**செய்தி வெளியீடு எண்: 961** **நாள்: 12.07.2024**

**செய்தி வெளியீடு**

## <u>தைவான் ஜவுளிக்குழு தமிழ்நாடு வருகை</u>
## <u>அரசுத்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனை</u>

ஜனவரி 2024–ல் நடைபெற்ற உலக முதலீட்டாளர்களின் மாநாட்டினை தொடர்ந்து, தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளிகளின் அனைத்து பிரிவுகளின் வளர்ச்சிக்கான பெருமுயற்சிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு அங்கமாக, 10.07.2024 மற்றும் 11.07.2024 ஆகிய தேதிகளில் 10 பேர் அடங்கிய தைவான் நாட்டின் தொழில்நுட்ப ஜவுளி மற்றும் செயற்கைஇழை துறைசார்ந்த தொழில்முனைவோர் குழு தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்து, கோவையில் 10க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப ஜவுளி நிறுவனங்களை பார்வையிட்டு, தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளித்துறையுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து கலந்தாலோசித்தனர்.

இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு பிரிவானது, தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளித் துறையில் முதலீட்டு சாத்தியக்கூறுகள் மற்றும் தொழில்நுட்ப இணைப்புகளை ஆராயும் நோக்கில் இந்த பயணத்திற்கு ஏற்பாடு செய்தது.

தைவான் ஜவுளித் துறையானது, சீனா மற்றும் தைவான் புவிசார் அரசியல் சூழ்நிலையின் காரணமாக, தமிழ்நாட்டினை ஒரு கவர்ச்சிகரமான மற்றும் மாற்று முதலீட்டுக்கான வாய்ப்பாக கருதுகிறது.

இப்பயணத்தின் தொடர்ச்சியாக, 12.07.2024 அன்று கைத்தறி மற்றும் துணிநூல் துறை, MSME மற்றும் தொழில்துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடும் பொருட்டு இப்பிரதிநிதிகள் குழு சென்னைக்கு வருகை தந்தது. தைவான் தூதுக்குழுவினருக்கும், அரசு உயர் அலுவலர்களுக்கும் இடையேயான கலந்துரையாடலை தமிழ்நாடு அரசு புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள நாமக்கல் கவிஞர் கட்டிடத்தில், மதிய உணவுடன் ஏற்பாடு செய்தது. கூட்டத்தில், தைவான் ஜவுளிக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் திரு ஜஸ்டின் ஹுவாங், தைவான் செயல்பாட்டு ஜவுளிகள் (Functional Textiles) மற்றும் விளையாட்டு ஜவுளிகளில் அதிக கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார். பின்னர், தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளித் துறையில் அரசின் சலுகைகள் குறித்து தைவான் பிரதிநிதிகளுக்கு தொழில் வழிகாட்டி முகமை விளக்கமளித்தது.

கூட்டத்தில் உரையாற்றிய சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை செயலர் திருமதி எஸ்.அர்ச்சனா பட்நாயக், இஆப, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும்

கதர்த் துறை  அரசு முதன்மைச் செயலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இஆப, மற்றும் தொழில் துறை செயலர் திரு.வி.அருண் ராய், இஆப, ஆகியோர் தமிழ்நாடு அரசு முழுமையான தொழில் வளர்ச்சிக்கு போதிய ஆதரவினை நல்கும் என தைவானின் ஜவுளிக் குழுவிற்கு உறுதியளித்தனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாட்டின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை  அரசு முதன்மைச் செயலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இஆப, துணிநூல் துறை ஆணையர் முனைவர் மா. வள்ளலார் இஆப, தொழில் துறை செயலர் திரு.V.அருண்ராய் இஆப, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை செயலர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், இஆப, தைவான் பொருளாதார மற்றும் கலாச்சார மையம் சென்னையின் இயக்குநர் திரு.ரிச்சர்டு சென் தைவான் ஜவுளிக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் திரு. ஜஸ்டின் ஹுவாங்,  இந்திய தொழில் கூட்டமைப்பு, தமிழ்நாடு மாநில கவுன்சில், தலைவர் திரு.ஸ்ரீவத்ஸ் ராம், திரு.கோபிகுமார் மற்றும் முனைவர்.வேல் கிருஷ்ணா ஆகியோர் கலந்து கொண்டனர்,

துணிநூல் ஆணையர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu